அறிவுச்சுரங்கம் கல்வியகம்


ARIBUCHCHURANGAM INSTITUTE VEERAMUNAI

வீரமுனை

வாழ்க்கையை வளமாக்க
வாய்ப்புக்களை வழங்கிடுவோம்.

ஆசான் – S.அஜீந்தன் (B.A) 0772633389 வீரமுனை, சம்மாந்துறை. அம்பாறை

WhatsApp - **0772633389** க்கு உங்கள் பெயர் முகவரியை அனுப்பி எமது பரீட்சை வழிகாட்டி குழுவுடன் இணைந்து கொள்ளுங்கள். எமது WhatApp பரீட்சை வழிகாட்டிக் குழுவில் PDF இல் வினாத்தாள்கள் அனுப்பப்படும். வினாத்தாள்களை பெற்றுக்கொள்ள உமது முகவரியை அனுப்பும் பட்சத்தில் எம்மால் உங்களது விபரம் அறியப்பட்டு வினாத்தாள்கள், மற்றும் பாடக்குறிப்பு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும்.



புலமைப்பாதை

வெளியீடு 11

பகுதி – 1

232 வினாக்கள்

புதிய பாடத்திட்டம்

ஆசிரியர்

S.அஜீந்தன் (B.A)

077 26 333 89



www.kedu.lk

LEARN EASY
– KNOWLEDGE IS POWER –

ZOOM
வகுப்புக்கள்

Grade 1 - A/L

Medium

TAMIL / ENGLISH

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala

Learn Easy வெளியீடு

புலமைவளரி

இலக்கை நோக்கி

Call: 76667 4945


தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள் தரம் 1 தொடக்கம் தரம் 5 வரை நடைபெறுகின்றன


www.learneasy.lk || www.lkedu.lk


LEARN EASY
KNOWLEDGE IS POWER

❖ பொருத்தமற்ற உருவின் கீழ்க் கோடிடுக.


(01)



(1)



(2)


(3)


(02)



(1)



(2)


(3)

(03)



(1)



(2)



(3)

❖ தரப்பட்டுள்ள சொற்களினால் விபரிக்கப்படுகின்ற உருவின் கீழ் கோடிடுக.

(04) இலகு, பறக்கும், அழகு



(1)



(2)


(3)


(05) மென்மை, நிறம், அழகு



(1)


(2)


(3)

(06) திறமை, ஒற்றுமை, சுறுசுறுப்பு



(1)


(2)



(3)

www.kedu.lk


(07) விதைகளை பரவச் செய்யும், பறந்து செல்லும், பால் குடித்து வளரும்.


(1)



(2)


(3)


(08) தேவையானவர்களுக்குத் தெரிவதில்லை. பார்வையுள்ளவர்களுக்குத் தேவையில்லை.



(1)



(2)


(3)


(09) அழகானது, முள்ளுடன் தொடர்புடையது, காலத்தோடு தொடர்பானது.



(1)



(2)


(3)


(10) பஞ்சு போல உடலிருக்கும், பளிங்கு போல கண்ணிருக்கும். அஞ்சும் இதனை எலி கண்டால், அசுத்தம் இல்லா அப்பிராணி,


(1)



(2)


(3)

(11) எரிபொருள் இன்றி ஓடிடுமாம். எளிய பயிற்சி தந்திடுமாம். அரிய பயணச் சாதனமாம். அருமையான வாகனமாம்.


(1)



(2)


(3)


www.kedu.lk

❖ பொருத்தமற்ற உருவின் கீழ்க் கோடிடுக.


(12)



(1)



(2)



(3)

(13) X,S,N,M,O,Z ஆகிய எழுத்துக்களை முகம் பார்க்கும் கண்ணாடியின் எதிரே பிடித்துப் பார்த்தால் எழுதிய விதப்படியே தெரிகின்ற எழுத்துக்கள் அடங்கிய விடையின் கீழ்க் கோடிடுக.

(1) X,S,M (2) X,N,Z (3) X,O,M

(14) இலங்கைக்குச் சுதந்திரம் எந்த நூற்றாண்டில் எந்த தசாப்தத்தில் கிடைத்தது?

(1) 19 ஆம் நூற்றாண்டின் 5 ஆம் தசாப்தத்தில்
(2) 20 ஆம் நூற்றாண்டின் 4 ஆம் தசாப்தத்தில்
(3) 20 ஆம் நூற்றாண்டின் 5 ஆம் தசாப்தத்தில்

(15) எப்போதாவது நடைபெறக் கூடிய நிகழ்வைத் தெரிவு செய்க.

(1) சூரியன் உதித்தல்

(2) நட்சத்திரம் தோன்றுதல்

(3) சூரிய கிரகணம் தோன்றுதல்

(16) கடிகாரம் என்னும் சொல்லில் இருந்து ஆகக் கூடுதலாக எத்தனை சொற்களை உருவாக்க முடியும்?

(1) 4 (2) 3 (3) 5

(17) தரிந்துவின் அம்மம்மா நோய் வந்து இறந்த போது தரிந்து தான் நன்றாகப் படித்து ஒரு ..... வந்து மக்களுக்குச் சேவை புரிய வேண்டும் என உறுதி பூண்டான். இடைவெளிக்குப் பொருத்தமான சொல்,

(1) ஆசிரியராக (2) வக்கீலாக (3) வைத்தியராக

(18) வெற்றிடத்தில் வரவேண்டிய சொல்,

கண் – காட்சி
காது – ஓசை
மூக்கு – .....

(1) கடித்தல் (2) வாசனை (3) பார்த்தல்

(19) குமாரின் மோட்டார் சைக்கிள் 1 லீற்றர் பெற்றோலில் 50 கிலோமீற்றர் செல்லும். குமார் தனது வீட்டிலிருந்து 175 கிலோமீற்றர் தூரத்திலுள்ள மாமாவின் வீட்டிற்குச் சென்று திரும்ப எத்தனை லீற்றர் பெற்றோல் தேவை?

(1) 5 லீற்றர் (2) 3 ½ லீற்றர் (3) 7 லீற்றர்

www.lkedu.lk

(20) ஓர் அரசாங்கப் பாடசாலையில் முதலாந் தவணைப் பரீட்சை மார்ச் மாதம் **18** ஆந் திகதி வியாழக்கிழமை தொடங்கியது. மார்ச் **23** ஆந் திகதி பொது விடுமுறைத் தினமாகும். தவணைப் பரீட்சை **6** நாட்கள் நடைபெற்றது. தவணைப் பரீட்சை முடிவடைந்த நாள் யாது?

(1) திங்கட்கிழமை (2) வியாழக்கிழமை (3) வெள்ளிக்கிழமை


❖ ஆரம்பத்தில் தரப்பட்ட படத்துடன் தொடர்புடைய மூன்று சொற்கள் அடங்கிய விடையைத் தெரிவு செய்க.

(21)




(1) நிழல், மழை, சூடு
(2) சூடு, வெயில், நிழல்
(3) வெயில், குளிர், மழை

(22)



(1) காற்று, வியர்வை, குளிர்
(2) சுகம், பணம், காற்று
(3) காற்று, குளிர், ஈரம்

(23)



(1) காடு
(2) வீடு
(3) குளக்கரை

(24)




(1) பாதுகாப்பு
(2) குளிர்
(3) சூடு

(25)




(1) மாமிச உண்ணி, குட்டிஈனும், பறக்கும்
(2) முட்டையிடும், பறக்கும், இறகுடையது
(3) உரோமம் உடையது, பறக்கும், குட்டியீனும்

(26)



(1) கண்ணாடி, குளிர், வெளிச்சம்
(2) வெப்பம், ஒளி, மின்
(3) ஒளி, காந்தம், மின்


(27)



(1) இது இரவு நேரக் காட்சியாகும்.
(2) இது மாலை நேரக் காட்சியாகும்.
(3) இது காலைக்காட்சியாகும்.

S.Ageenthan(B.A)
www.lkedu.lk

❖ தரப்பட்டுள்ள உருக்களைக் கொண்டு விடை தருக.



(28) ஒன்றோடொன்று சினேகமாக இருப்பதற்கு அதிகம் வாய்ப்புள்ள இரண்டு விலங்குகள்,
(1) **A** யும் **D** யும் (2) **B** யும் **D** யும் (3) **B** யும் **E** யும்

(29) மிகப் பெரிய விலங்கும் - மிகச்சிறிய விலங்கும் முறையே,
(1) **A** யும் **B** யும் (2) **C** யும் **D** யும் (3) **D** யும் **E** யும்

❖ **19, 20** ஆகிய வினாக்களில் தரப்பட்டுள்ளவற்றில் மூன்றை ஒரு கூட்டமாகவும் இரண்டை வேறொரு கூட்டமாகவும் வேறுபடுத்தலாம். அவ்விரு கூட்டங்களையும் சேராதது யாது?

(30) ஜனவரி, பெப்ரவரி, மார்ச், ஏப்பிரல், மே, ஜூன்
(1) பெப்ரவரி (2) ஏப்ரல் (3) ஜூன்

(31) லீற்றர், மீற்றர், கிலோமீற்றர், கிலோக்கிராம், கிராம், சென்ரிமீற்றர்
(1) மீற்றர் (2) லீற்றர் (3) கிராம்

(32) ஒழுங்குபடுத்துக.
A. புகையிரதத்தில் ஏறுதல்
B. பயணச்சீட்டு பெறல்
C. பொதிகளை இருக்கையின் மேல் வைத்தல்
D. ஆசனத்தில் அமர்தல்
E. புகையிரத நிலையம் செல்லுதல்



(1) EBACD (2) ADEBC (3) CDEAB

(33) சப்தனா தனது வீட்டிலிருந்து வேலைக்குப் போய் பின் வீடு திரும்புவதற்கு 32km தூரம் சைக்கிள் ஓட வேண்டும். சப்தனாவின் வீட்டிற்கும் வேலைத்தளத்திற்கும் சரி நடுவில் ஒரு வைத்தியசாலை உள்ளது. எனின் சப்தனாவின் வீட்டிலிருந்து எத்தனை கிலோமீற்றர் தூரத்தில் வைத்தியசாலை உள்ளது?

(1) 16km (2) 8km (3) 9km

(34) பின்வரும் வாக்கியங்களில் சரியாக எழுதப்பட்டுள்ள வாக்கியத்தை தெரிவு செய்க.

(1) கெக்கு இரையை விழுங்குகின்றது.
(2) கொக்கு இரையை விழுங்குகின்றது.
(3) கொக்கு இரயை விழுங்குகின்றன.

(35) வள்ளுவர் பாடசாலை 2014 ஆம் ஆண்டு தமது வெள்ளிவிழாவைக் கொண்டாடியது எனின், அப்பாடசாலை வைரவிழாவை எத்தனையாம் ஆண்டு கொண்டாடும்?
(1) 2049 **(2) 2048** **(3) 2050**

www.lkedu.lk

(36) ஹர்சாலியின் தந்தை **4** ஆண்டுகளுக்கு ஒரு முறை வெளிநாட்டிலிருந்து வருவார். அவர் இறுதியாக **2009** ஆம் ஆண்டு வந்திருந்தார் எனில், அடுத்து அவர் எந்த ஆண்டு மீண்டும் வந்திருப்பார்?

(1) 2013 **(2) 2014** **(3) 2012**

(37) ஒரு சைக்கிளை வாங்குவதற்கு ரூபாய் **8500** தேவைப்பட்டது. என்னிடம் ரூபாய் **4800** இருந்தது. மீதியை இரு நண்பர்களிடமிருந்து பெற்றுக் கொண்டேன். பெற்றுக் கொண்ட பணம் எவ்வளவு?

(1) ரூபாய் **2400** உம், ரூபாய் **1300** உம் ஆகும்.

(2) ரூபாய் **2500** உம், ரூபாய் **2300** உம் ஆகும்.

(3) ரூபாய் **5200** உம், ரூபாய் **3300** உம் ஆகும்.

(38) இன்று **13** ஆம் திகதியாகும். நாளை மறுநாள் தனது பிறந்த தினமாகும் என அம்மு நேற்றுக் கூறினாள். நேற்றைக்கு முந்திய தினம் வியாழன் ஆயின் அம்முவின் பிறந்த திகதியும் பிறந்த நேரமும் முறையே

(1) **15** திங்கள் (2) **14** ஞாயிறு (3) **14** சனி

(39) சமதூர இடைவெளியில் நடப்பட்ட மூன்று கம்பங்களுக்கு இடையிலான தூரம் **24cm** எனின், ஆறு கம்பங்களுக்கு இடையிலான தூரம் யாது?

(1) 48cm **(2) 60cm** **(3) 56cm**


(40) ''புளங்காங்கிதம்'' என்னும் சொல்லில் உள்ள எழுத்துக்கள் மூலம் ஆக்கக் கூடிய ஒரு சொல்,

(1) பூங்கா (2) தங்கம் (3) காம்பு

(41) ஒரு விருந்தில் எட்டுப் பேர்கள் கலந்து கொண்டனர். விருந்து முடிவில் ஒவ்வொருவரும் ஒவ்வொருவரோடு கை குலுக்கிக் கொண்டால் அங்கு எத்தனை கைகுலுக்கல்கள் நிகழந்திருக்கும்?

(1) 56 **(2) 49** **(3) 28**

❖ கீழ் வரும் படங்களினை அடிப்படையாகக் கொண்டு 12ம், 13ம் வினாக்களுக்கு விடை தருக.



(42) ஒரு மாம்பழமும் ஒரு அன்னாசிப்பழமும் வாங்க எவ்வளவு பணம் தேவை?

(1) ரூபாய் 20.00 (2) ரூபாய் 30.00 (3) ரூபாய் 15.00

(43) ஐந்து அப்பிள்கள் வாங்கும் பணத்திற்கு எத்தனை மாம்பழங்கள் வாங்கலாம்?

(1) 5 மாம்பழங்கள் (2) 10 மாம்பழங்கள் (3) 2 மாம்பழங்கள்

www.lkedu.lk

(44) மூன்று கால் மேசை ஒன்றைச் சுற்றி நான்கு கால் கதிரைகள் ஐந்து உள்ளன. கால்களின் மொத்த எண்ணிக்கை யாது?

(1) 16 **(2) 19** **(3) 23**

(45) நாளை மறுதினம் பாடசாலைக்கு வரும் போது சிறிய கதைகள், பாடல்கள், நகைச்சுவைத் துணுக்குகள் ஆகியவற்றைக் கொண்டு வாருங்கள் இக்கூற்று,

(1) அறிவுறுத்தல் (2) அறிவித்தல் (3) அறிவுரை

(46) பாடலை வாசித்து வினாவுக்கு விடை தருக.

கழுத்தை வளைத்து கூவிடுமே
காலைப் பொழுதை அறிவிக்குமே
எழுந்திரு விழித்திரு என்றல்லோ
எழும்பித் தூக்கம் கலைத்திடுமே

S.Ageenthan(B.A)

இப்பாடலுக்குப் பொருத்தமான பறவை எது?

(1) காகம் (2) குயில் (3) சேவல்


(47) தரப்பட்டுள்ள பொருள் சோடிகளுள் முதலாவது பொருளைப் பயன்படுத்துவதற்கு இரண்டாவது பொருள் தேவைப்படும் பொருள் இடம்பெறும் விடையைத் தெரிவு செய்க.

(1) புத்தகம் - பேனா (2) ஊசி – நூல் (3) கோப்பை – பீரிஸ்

(48) மைதானமொன்றில் வெள்ளை, சிவப்பு, மஞ்சள் என்ற ஒழுங்கில் தொடர்ச்சியாக கொடிகள் நடப்பட்டிருந்தன எனின், அம்மைதானத்தில் 42 ஆவது நடப்பட்டிருந்த கொடியின் நிறம் என்ன?

(1) சிவப்பு (2) மஞ்சள் (3) வெள்ளை


(49) நன்றி – பாதுகாப்பு – மோப்பம்



(1)



(2)



(3)

❖ கவிதையை வாசித்து அதன்படி விடையளிக்குக.

தென்றல் தடவியதில் கண்கள் மூடின
உள்ளம் திறந்ததில் காட்சிகள் பதிந்தன
யாருமில்லா அழகிய நந்தவனம் அங்கே
பஞ்சவர்ணங்களில் பல்லாயிரம் பூக்கள் சிரித்தன

(50) இக்கவிதை எதைப் பற்றிக் கூறுகிறது?

(1) அழகிய பூந்தோட்டம் பற்றி
(2) கனவொன்றைப் பற்றி
(3) பஞ்சவர்ணப் பூக்கள் பற்றி

www.ikeou.lk

(51) நந்தவனத்தில் இருக்க முடியாதவை
(1) வேலையாட்கள்
(2) பூக்களா
(3) வண்ணத்துப்பூச்சிகள்

(52) காட்டப்பட்டுள்ள கடிகாரம் தவறானது. அத்தவறு காணப்படுவதன் காரணம்,



(1) கடிகார முட்களில்
(2) கடிகாரத்தின் இலக்கங்களில்
(3) கடிகாரம் காட்டும் நேரத்தில்

(53) யமுனா, தமயந்தியிலும் பார்க்க 6 வயது இளையவள். தமயந்தியின் தற்போதய வயது 14 எனின், எத்தனை வருடங்களுக்குப் பின் யமுனா 11 வயது உடையவளாக இருப்பாள்?
(1) 3 வருடங்கள் (2) 4 வருடங்கள் (3) 5 வருடங்கள்

❖ பாடலடியை வாசித்து விடை தருக.

மாறும் சுற்றுச் சூழ் நிலையில்
மாசுக்கள் செய்து கெடுக்காமல்
போற்றும் பொதுச் சொத்(து) அழிக்காமல்
பேணிக் காப்பது ஒழுக்கம் என்போம்.

(54) இப்பாடலடி வெளிப்படுத்தும் கருத்து,
(1) குற்றங்களைச் செய்ய வேண்டும்.
(2) பொதுச் சொத்துக்களைக் காக்க வேண்டும்.
(3) ஒழுக்கமுடன் வாழ் வேண்டும்.

(55) பொதுச் சொத்துக்களைப் பேணிக்காப்பது,
(1) ஒழுக்கமாகும்
(2) குற்றங்களாகும்
(3) பொய்களாகும்

(56) ஒரு பண்ணையில் உள்ள ஓர் ஆட்டிற்கு **3** கால்கள் உள்ளன. அப்பண்ணையில் மொத்தமாக **11** ஆடுகள் உள்ளன எனின், அங்குள்ள ஆடுகளின் கால்களின் எண்ணிக்கை யாது?
(1) 33 **(2) 43** **(3) 30**

(57) ஒரு பேருந்தில் சென்ற ஒரு மாணவன் தனது பயணச் சீட்டுக்காக நடத்துனரிடம் ரூபாய் **20** ஐ வழங்கிய போது நடத்துநர் அம்மாணவனிடம் மேலும் ரூபாய் **2** ஐப் பெற்று ரூபாய் **10** ஐ மீதியாகக் கொடுத்தார். பேருந்தின் கட்டணம் எவ்வளவு?
(1) ரூபாய் **10** (2) ரூபாய் **12** (3) ரூபாய் **14**


(58) தரம் **05** இல் கற்கும் எனது தம்பியின் வயது **10** ஆகும். எனது வயது **12** ஆகும். நான் எனது **16** வயதில் க.பொ.த சாதாரண தரப் பரீட்சை எழுதும் போது எனது தம்பி எத்தனையாம் தரத்தில் கற்பாள்?
(1) தரம் **08** (2) தரம் **09** (3) தரம் **10**

www.lkedu.lk

(59) ஒருவர் வீட்டிலிருந்து **120km** தூரத்திலுள்ள அலுவலகத்திற்கு மணிக்கு **60km** வேகத்தில் சென்றார். திரும்பி வரும்பொழுது மணிக்கு **40km** வேகத்தில் வந்தார். அவர் முழுப் பிரயாணத்திற்கும் செலவிட்ட நேரம் யாது?

(1) **7** மணித்தியாலம் (2) **6** மணித்தியாலம் (3) **5** மணித்தியாலம்

❖ தரப்பட்டுள்ள உருவில் கிரிக்கட்டை விரும்பும் பிள்ளைகள் சதுரத்தினாலும், உதைபந்தை விரும்பும் பிள்ளைகள் முக்கோணியினாலும் , கரப்பந்தை விரும்பும் பிள்ளைகள் செவ்வகத்தினாலும் காட்டப்பட்டுள்ளனர்.



(60) மூன்று விளையாட்டையும் விரும்பும் பிள்ளை யார்?

(1) மது (2) காதர் (3) ரவி


(61) ஏதேனும் ஒரு விளையாட்டை மாத்திரம் விரும்பும் பிள்ளைகள் யாவர்?

(1) மது, விஜி, காதர் (2) புனிதா, காதர், விஜி (3)புனிதா,அமுதா, நளினி

(62) மருந்து குடிப்பதற்காக நோயாளி ஒருவருக்கு வைத்தியர் கீழே குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தலை வழங்கினார். "ஒரு தடவையில் 2 வில்லைகள் வீதம் நாளொன்றுக்கு 3 தடவைகள் (சாப்பாட்டுக்குப் பின்னர்) எடுக்கவும்" நோயாளிக்கு 50 மருந்து வில்லைகள் தரப்பட்டுள்ளன. முதலாவது மருந்து வேளை காலை சாப்பாட்டுக்குப் பின்னர் எடுக்கப்பட்டதாயின் , அம்மருந்து வில்லைகளின் எண்ணிக்கை எத்தனை முழு நாட்களுக்குப் போதுமானது?

(1) 8 நாட்கள் (2) 9 நாட்கள் (3) 25 நாட்கள்

(63) அம்புக்குறிகளின் மூலம் காட்டப்படும் பாதைகள் வழியே A இலிருந்து B வரைக்கும் செல்வதற்கு மிகத் தூரம் கூடிய பாதையைக் காட்டும் உருவின் கீழ்க் கோடிடுக.



(1) (2) (3)

(64) **W.W.W** என்பதன் விரிவாக்கம் யாது?

(1) மின்னஞ்சல் (2) இணையம் (3) வையக விரிவு வலை

www.kedu.lk


(65) பாடசாலையின் கண்காட்சியொன்று 9 ஆந்திகதி ஆரம்பமாகி மூன்று நாட்கள் நடைபெற்றது எனின், கண்காட்சி முடிவடைந்த திகதி,

(1) 11 ஆந்திகதி (2) 12 ஆந்திகதி (3) 13ஆந் திகதி

(66) தரிந்துவின் வயது அவனது தந்தையின் வயதின் அரைவாசியாகும். அவனது தந்தையின் வயது **34** எனின், இருவரினதும் வயதுகளின் கூட்டுத்தொகை யாது?

(1) 51 **(2) 68** **(3) 50**

❖ ஒரு வகுப்பில் மாணவர்கள் விரும்பும் பூக்கள் தொடர்பான விபரம் தரப்பட்டுள்ளது. அதனை அவதானித்து விடை எழுதுக.



(67) மல்லிகைப் பூவை மட்டும் விரும்புவோர் எத்தனை பேர்?

(1) 5 **(2) 6** **(3) 9**

(68) மல்லிகையையும் தாமரையையும் விரும்பும் மாணவர்கள் எத்தனை பேர்?


(1) 1 **(2) 3** **(3) 9**


(69) **3m** நீளமும் **2m** உயரமும் உள்ள சுவருக்கு வர்ணம் பூசுவதற்கு **500ml** வர்ணப்பூச்சு தேவை. **6m** நீளமும் **3m** உயரமும் கொண்ட சுவரக்கு வர்ணம் பூச எவ்வளவு அட வர்ணம் தேவை?

(1) 1000ml (2) 1500ml (3) 1200ml

(70) பின்வரும் உருக்கள் ஒவ்வொன்றிலும் உள்ள செங்கோணங்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் ஒழுங்கில் அவ்வுருக்கள் வரிசைப்படுத்தப்பட்டுள்ள விடையைத் தெரிவு செய்க.







(1) A B C (2) A C B (3) B C A

(71) தேன்கூடு ஒன்றில் உள்ள தேனீக்களின் எண்ணிக்கை ஒவ்வொரு நிமிடத்திற்கும் இரட்டிப்பாக மாறுகின்றது. தேன் கூட்டின் **3** பகுதி தேனீக்கள் மு. ப **8.57**ற்கு காணப்பட்டது. தேன்கூடு தேனீக்களால் முழுமையாக நிரம்பியிருந்த நேரம்

(1) மு.ப **8.58** (2)மு. ப **9.00** (3) மு.ப **8.59**

(72) **2020** ஆம் ஆண்டு தை மாதத்தினதும், மாசி மாதத்தினதும் நாட்களின் மொத்த எண்ணிக்கை யாது?

(1) **59** நாட்கள் (2) **58** நாட்கள் (3) **60** நாட்கள்

www.lkedu.lk

(73) ஒரு மாணவன் அதிகமாக மாம்பழத்தைச் சாப்பிட்டதால் நோய்வாய்ப்பட்டான். இதற்கு பொருத்தமான பழமொழி எது?

(1) நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.

(2) அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு.


(3) பேராசை பெருந்தரித்திரம்.

(74) தளவாடியில் பார்க்கும் போது மாற்றமின்றி தெரியும் எழுத்துக்கள் எவை?

(1) ACW (2) OAW (3) LKS


❖ 75ஆம், 76 ஆம் 77 ஆம் வினாக்களுக்கு கீழே தரப்பட்டுள்ள பட அமைப்பை ஏதோ ஒரு விதத்துக்கு ஏற்ப ஒழுங்குபடுத்தினால் கிடைக்கும் சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

(75)




(1) C,E,A,D,B (2) C,D,B,E,A (3) A,E,C,D,B

(76)



(1) ECABD (2) DBCAE (3) EACDB

(77) கீழே கடிதம் எழுதும் ஒழுங்கு மாறியுள்ளது. அதனை ஒழுங்குபடுத்தினால் கிடைக்கும் சரியான விடையின் கீழ்க் கோடிடுக.



(1) CEABD (2) CDBAE (3) ECBDA

www.ikeau.lk

❖ குழம்பியுள்ளவற்றின் சரியான ஒழுங்கு முறையைத் தெரிவு செய்க.

(78)

A. சிறு கோப்பைகளில் ஊற்றப்பட்டது.
B. அத்துடன் சீனி சேர்த்து நன்கு கலக்கப்பட்டது.
C. நன்றாக நீர் கொதிக்கவைக்கப்பட்டது.
D. அனைவருக்கும் பருகக் கொடுக்கப்பட்டது.
E. கொதித்துக் கொண்டிருக்கும் போது அதனுள் தேயிலைத் தூள் போடப்பட்டது.

(1) CEBDA (2) CEBAD (3) CEDAB

❖ தமயந்தியும், ஞானகியும் ஒரே அளவு உயரமுள்ளவர்கள். பாமதி , தமயந்திலும் பார்க்க உயரம் கூடியவள். மஞ்சுளா ஞானகியிலும் பார்க்க கட்டையானவள்.

(79) இவர்களுள் அதிகம் கட்டையானவள் யார்?
(1) பாமதி (2) ஞானகி (3) மஞ்சுளா

(80) இவர்களுள் அதிக உயரமானவள் யார்?
(1) ஞானகி (2) பாமதி (3) தமயந்தி

(81) மரதன் ஓட்டப் போட்டியில் குமரன் முதல் தடவை தோல்வியடைந்தான். அவன் விடாது பயிற்சியில் ஈடுபட்டு பின்னர் நடைபெற்ற மரதன் ஓட்டப்போட்டியில் வெற்றி பெற்றான். இச்சம்பவத்துடன் தொடர்புடைய பழமொழியைத் தெரிவுசெய்க.

(1) ஆழமறியாமல் காலை விடாதே.
(2) இளங்கன்று பயமறியாது.
(3) முயற்சி திருவினையாக்கும்.

S.Ageenthan(B.A)

(82) பின்வரும் அட்டவணையில் உள்ளவர்களில் வயது குறைந்தவரையும் வயது கூடியவரையும் முறையே தெரிவு செய்க.






2006.06.13	2007.10.02	2006.04.28	2007.05.20
தட்சா	அபிலாசினி	சதுராந்தகி	அதிஸ்ரா

(1) சதுராந்தகி, அபிலாசினி (2) அதிஸ்ரா, தட்சா (3) அபிலாசினி, சதுராந்தகி

(83) வியாபாரி ஒருவன் மாம்பழமொன்றை ரூபாய் **25.00** இற்கு வாங்கி ரூபாய் **30.00** வீதம் விற்றதால் ரூபாய் **100.00** ஐ இலாபமாக அடைந்தான். அவன் விற்ற மாம்பழங்கள் எத்தனை?
(1) 04 **(2) 25** **(3) 20**

(84) ஹர்சாலி காலையில் பாடசாலை நோக்கிச் செல்லும் போது அவளது நிழல் இடது கைப்பக்கம் விழுந்தது எனின், ஹர்சாலி பாடசாலை நோக்கிச் செல்லும் திசை எது?
(1) கிழக்கு (2) மேற்கு (3) வடக்கு

www.ikeu.lk

❖ பின்வரும் பாடலை வாசித்து சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

பாம்மைக் கண்டால் நடுங்கிடுமே!
பாய்ந்தே ஓடி ஒடுங்கிடுமே!
வீம்பாய்க் கத்திக் கெட்டிடுமே!
விரோதி கண்ணில் பட்டிடுமே!

S.Ageenthan(B.A)

(85) பாடலில் விபரிக்கப்படும் பிராணி எது?
(1) காகம் (2) எலி (3) தவளை

(86) பாடலில் சிறப்பிக்கப்படும் பிராணியின் விரோதி எது?
(1) முதலை (2) பாம்பு (3) பூனை


(87) அதிதியனும் கேசயனும் சேர்ந்து ரூபாய் **1000.00** வைத்திருந்தார்கள். அதிதியனுடைய பணம் கேசயனின் பணத்திலும் நான்கு மடங்காயின் கேசயனின் பணம் எவ்வளவு?





(1) ரூபா 400.00 (2) ரூபா 300.00 (3) ரூபா 200.00

❖ சதுரமுகியொன்றின் மூன்று வேறுபட்ட நிலைகள் தரப்பட்டுள்ளன. அவற்றை அவதானித்து 88 ஆம், 89 ஆம் வினாக்களுக்கு விடை தருக.




(88) இலக்கம் 3 இற்கு எதிரே இருக்கும் இலக்கம் எது?
(1) 2 **(2) 5** **(3) 4**

(89) இலக்கம் 6 இற்கு எதிரே இருக்கும் இலக்கம் எது?
(1) 3 **(2) 2** **(3) 4**

(90) சிறுவனும் நாயும் காணப்படும் இப்படத்தில் குறைபாடு ஒன்று உள்ளது. அக்குறைபாடு காணப்படுவது,

(1) சிறுவனில்
(2) நாயில்
(3) சிறுவனிலும், நாயிலும்



www.ikeau.lk

(91) எல்லா மாணவர்களுக்கும் பொதுவான பண்பு

(1) தினமும் வீட்டுப்பாடம் தொடர்பான வேலைகளில் ஈடுபடுதல்.

(2) அதிக எண்ணிக்கையான நண்பர்களைக் கொண்டிருத்தல்.

(3) ஏதேனும் ஒரு வகுப்பில் கல்வி கற்றல்.

(92) **1** தொடக்கம் **25** வரையுள்ள எல்லா ஒற்றை எண்களையும் எழுதும் போது **1** எழுதப்படும் தடவைகளின் எண்ணிக்கை யாது?

(1) 7 **(2) 8** **(3) 13**

(93) மோட்டார் கார்களைக் கழுவும் ஒரு பொறி **30** நிமிடங்களில் இரண்டு மோட்டார் கார்களைக் கழுவும். அதே பொறி அதே வேகத்தில் மூன்று மணித்தியாலங்களில் எத்தனை மோட்டார் கார்களைக் கழுவும்?



S.Ageenthan(B.A)

(1) 10 **(2) 12** **(3) 18**

❖ நாதனும் , மோகனும் லலிதாவின் பிள்ளைகள் ஆவர். குமுதனுக்கு மோகன் சிற்றப்பா ஆவார். இதன்படி

(94) நாதனுக்கும், குமுதனுக்கும் இடையே உள்ள உறவு முறை என்ன?
(1) பாட்டன் - பேரன் (2) பெரியப்பா – மகன் (3) அப்பா – மகன்

(95) குமுதனுக்குக்கும் லலிதா என்ன முறையாவார்?
(1) மாமி (2) பாட்டி (3) அம்மா

❖ பின்வரும் வாக்கியங்களில் தடித்த எழுத்தில் உள்ள சொற்களுக்குப் பதிலாகப் பயன்படுத்தக் கூடிய சொற்களைக் கொண்ட விடையைத் தெரிவு செய்க.

(96) **ஊன்** உணவு உடல் நலத்திற்கு **கேடு** விளைவிக்கும்.
(1) உணவு, இன்பம் (2) இறைச்சி, தீங்கு (3) உணவு, தீங்கு

(97) சுரேன் **தடாகத்தில்** உள்ள **கமலப்** பூக்களைப் பறித்தான்.
(1) வாவியில், மலர்களைப் (2) பொய்கையில், தாமரைப் (3) ஆற்றில், புஸ்பம்

(98) பாதுகாப்பு நிலையமொன்றில் இரு சக்கர, முச்சக்கர வாகனங்கள் **22** நின்றன. அவற்றின் சில்லுகளின் எண்ணிக்கை **52** ஆகும். அங்குள்ள முச்சக்கர வண்டிகளின் எண்ணிக்கை யாது?

(1) 14 **(2) 8** **(3) 10**

www.kedu.lk

❖ **99** ஆம், **100** ஆம் வினாக்களில் சரியான கருத்தைத் தரும் வாக்கியத்தைத் தெரிவுசெய்க.

(99)


(1) மீன்கள் நீரில் நீந்தியது.
(2) முயல் துள்ளித் துள்ளி ஓடின.
(3) மாணவர்கள் மைதானத்தில் விளையாடினார்கள்.

S.Ageenthan(B.A)

(100)

(1) கண்டங்களில் பெரியது அவுஸ்திரேலியா ஆகும்.
(2) லீப் வருடத்தில் **366** நாட்கள் உண்டு.
(3) இலங்கை பசுபிக் சமுத்திரத்தில் அமைந்துள்ளது.


(101) ஒரு பண்ணையிலுள்ள பிராணிகளின் கால்களின் எண்ணிக்கை **60** ஆகும். அங்குள்ள பிராணிகளின் தலைகளின் எண்ணிக்கை **25** ஆகும். அங்குள்ள ஆடுகளினதும் கோழிகளினதும் எண்ணிக்கை முறையே.






(1) 20, 5 (2) 5, 20 (3) 10, 15

(102) உட்பக்கம் தெரியாத பெட்டி ஒன்றினுள் 2 கறுப்பு நிறப் பேனைகளும், 2 நீல நிறப் பேனைகளும் உள்ளன. பெட்டியிலிருந்து ஒரு நீல நிறப் பேனையைத் தவறாமல் பெறுவதற்கு பெட்டியில் இருந்து எடுக்க வேண்டிய பேனைகளின் ஆகக் குறைந்த எண்ணிக்கை யாது?



(1) 2 பேனைகள் (2) 3 பேனைகள் (3) 4 பேனைகள்

(103) பெட்டி ஒன்றில் 3 கறுப்பு நிறப் பேனைகளும், 3 நீல நிறப் பேனைகளும் 2 சிவப்பு நிறப் பேனைகளும் உள்ளன. பெட்டியிலிருந்து ஒரு சிவப்பு நிறப் பேனையைத் தவறாமல் பெறுவதற்கு பெட்டியில் இருந்து எடுக்க வேண்டிய பேனைகளின் ஆகக் குறைந்த எண்ணிக்கை யாது?



(1) 4 பேனைகள் (2) 6 பேனைகள் (3) 7 பேனைகள்

www.ikeduk

(104) பின்வரும் கலந்துரையாடலை வாசிக்க.



A பாடசாலைக்கு எப்படி போவது? நனைந்து போவேன்.
B இன்று மழை பெய்யுமா? வானம் இருண்டிருக்கின்றது.
C குடையை எடுத்துச் செல்ல மறக்க வேண்டாம்.
D நேற்று பகல் முழுவதும் மழை பெய்தது. இன்றும் மழை பெய்யும் போல் தெரிகின்றது.

உரையாடல் மிகப் பொருத்தமான ஒழுங்கில் வரிசைப்படுத்தப்பட்டுள்ள விடையைத் தெரிவு செய்க.

(1) ADCB **(2)** BDAC **(3)** CDBA

(105) சம்பவம் ஒன்றின் ஐந்து சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன. அவற்றின் சரியான ஒழுங்கு வரிசையைக் காட்டும் விடையினைத் தெரிவு செய்க.

A. அது பெரிய மழையாகப் பெய்யத் தொடங்கியது.
B. சிறுது நேரத்தில் மழைத்துளிகள் விழ ஆரம்பித்தன.
C. ஒரு மணித்தியாலம் வரை ஓயாமல் மழை பெய்தது.
D. பின்னர் மழை மெல்ல மெல்ல ஓயத் தொடங்கியது.
E. கருமேகங்கள் வானைச் சூழ்ந்து கொண்டன.

(1) EBACD (2) EBCAD (3) CBAED

(106) கீழே உள்ள கவிதையின் வரிகள் ஒழுங்கின்றி எழுதப்பட்டுள்ளன. அர்த்தமுள்ள கவிதையாக அமையுமாறு ஆங்கில எழுத்துக்களைப் பொருத்தமாக ஒழுங்குபடுத்துக.



A. அருமைக் குஞ்சு மூன்றையும்
B. கூடு ஒன்றைக் கட்டியே
C. அதில் வளர்த்து வந்தது
D. குருவி ஒன்று மரத்திலே

(1) DCAB (2) DBAC (3) ACDB

(107) காலத்தினை ஒழுங்கு வரிசைப்படி காட்டும் சரியான விடை யாது?

(1) வருடம், மாதம், வாரம், நாள்
(2) வருடம், வாரம், நாள், மாதம்
(3) நாள், வாரம், மாதம், வருடம்

(108) "கிடைக்கும் சந்தர்ப்பத்தைத் தவற விடக்கூடாது" எனும் கருத்தைத் தரும் பழமொழி யாது?
(1) சிறு துரும்பும் பல்லுக்குத்த உதவும்.
(2) காற்றுள்ள போதே தூற்றிக் கொள்.
(3) எறும்பூரக் கற்குழியும்.

www.lkedu.lk

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்




இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

(109) இவ்விரு பாத்திரங்களையும் பயன்படுத்தி மாத்திரம் பயன்படுத்தி **4** லீற்றர் நீரைச் சரியாக அளக்க முடியுமா?



(1) முடியும்

(2) முடியாது

(3) விடை அளிப்பதற்கு மேலும் தகவல்கள் தேவை

❖ புள்ளிக் கோட்டிற்குப் பொருத்தமில்லாத விடையைத் தெரிவு செய்க.

(110) பரீட்சையில் ..... பிள்ளைகள் ..... அடைந்தனர்.

(1) சித்தியடைந்த, மகிழ்ச்சி

(2) தோற்றிய, வறுமை

(3) சித்தியடையாத, கவலை

(111) நானும் ..... வீட்டிற்கு ..... சென்றோம்.

(1) நீயும் , விரைவாகச்

(2) அவனும், தாமதமாகச்

(3) தம்பியும், வேகமாகச்

❖ **112** ஆம் **113**ஆம் வினாக்களுக்குத் தொடரில் அடுத்து வரக்கூடிய பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.

(112) கமுகு ⟶ முதிரை ⟶ திகதி ⟶ .....

(1) திருடி (2) கவிதை (3) முயல்

(113) குளவி ⟶ விசும்பு ⟶ புகழ்ச்சி ⟶ .....

(1) சிதம்பரம் (2) சிக்கனம் (3) கட்டடம்

❖ வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.

(114) உரல் : உலக்கை எனில் வள்ளம் : .....

(1) துடுப்பு (2) படகு (3) நீர்

(115) ஆகாய விமானம் - விமான நிலையம் எனின், கப்பல் : .....

(1) நீர் (2) துறைமுகம் (3) கரை

(116) அம்மா காய்கறிகளைக் கொண்டுவருவதற்குச் சந்தைக்குச் சென்றார். பிள்ளைகள் கற்பதற்கு பாடசாலைக்குச் சென்றனர்.
அம்மா : பிள்ளைகள் எனின், சந்தைக்கு : .....

(1) காய்கறிகள் (2) பாடசாலைக்கு (3) கற்பதற்கு

(117) நல்ல பிள்ரளகள் ஆசிரியரின் வார்த்தைகளைச் செவிமெடுக்கின்றனர். பிரசித்திபெற்ற பாடகர் இனிமையான குரலில் பாட்டுப் பாடினார்.
பிள்ளைகள் : பாடகர் எனின், செவிமெடுக்கின்றனர் : .....

(1) குரலில் (2) பாட்டு (3) பாடினார்

www.lkedu.lk

❖ **காரணங்களோடு தொடர்புடைய விடையின் கீழ்க் கோடிடுக.**

(118) மார்கழி மாதத்தில் வழக்கமாக மழை பெய்வது வழக்கமாகும். அன்று மார்கழி 10 ஆந்திகதியாகும். எனவே அன்று மழை பெய்தது என்பது,
(1) சரி (2) பிழை (3) கூறமுடியாது

(119) "சிறுவர்கள் அனைவரும் அதிகமாக நீர் அருந்த வேண்டும் எனவும் நீர்த் தன்மையுள்ள பழங்களை உண்ண வேண்டும்" எனவும் அதிபர் கூறினார். இவர் இவ்வாறு கூறியமைக்கான காரணம்,
(1) அது கடுமையான குளிர் காலம் என்பதனால்.
(2) அது இரவுப் பொழுது அதிகமான காலம் என்பதனால்.
(3) அது வெப்பம் அதிகமான காலம் என்பதனாலாகும்.

S.Ageenthan B.A

(120) மழை பெய்ததால் மரங்கள் செழித்து வளரும். இப்போது மழை பெய்யவில்லை.
(1) மரங்கள் செழித்து வளரும்.
(2) மரங்கள் செழித்து வளரவில்லை.
(3) மரங்கள் பூக்களால் நிறைந்துள்ளன.

(121) காற்று வீசினால் மரங்கள் அசையும். இப்போது மரம் அசையவில்லை. எனவே,
(1) காற்று வீசுகின்றது.
(2) காற்று வீசவில்லை
(3) காற்று வீசும்

(122) பாடசாலையில் காலை உணவை உண்ட அதிகமான மாணவர்கள் மயக்கமடைந்தனர். இதற்குப் பொருத்தமான காரணமாக அமைவது,
(1) மாணவர்கள் அளவுக்கு அதிகமாக உணவை உண்டமை.
(2) மாணவர்கள் உண்ட உணவு நஞ்சடைந்திருந்தமை.
(3) மாணவர்கள் அநேகமானோர் பசியோடு இருந்தமை.

(123) இப்போது நவீன செல்லிடத்தொலைபேசி அவசியமானதொன்றாகக் கருதப்படுவதற்கான காரணம்,
(1) நவீன செல்லிடத்தொலைபேசிகள் விலை குறைவு என்பதனால்.
(2) மிக விரைவாக தகவல்களைப் பரிமாறலாம் என்பதனால்.
(3) அதனைத் தொழிற்படுத்துவது மிகவும் கடினம் என்பதால்.

(124) இரவு வேளைகளில் திருடர்களைக் கண்டால் நாய் குரைப்பது வழக்கமாகும். அன்று இரவு நாய் குரைத்தது. எனவே வீட்டுக்குத் திருடர்கள் வந்துள்ளனர் என்பது,
(1) சரி (2) பிழை (3) கூறமுடியாது

(125) மக்கள் பயத்தோடு தமது பிள்ளைகளைக் கூட்டிக்கொண்டு பாதுகாப்பான இடத்தினை நோக்கி வேகமாகச் சென்றனர். இந்நிகழ்வுக்குக் காரணமாக அமைவது,
(1) இலவசமாக உணவு கொடுக்கப்படுகின்றது என அறிவிக்கப்பட்டமை.
(2) புத்தாண்டு விளையாட்டு நிகழ்வு இடம்பெற உள்ளது என அறிவிக்கப்பட்டமை.
(3) சுனாமிப் பேரலை ஏற்படப் போகின்றது என அறிவிக்கப்பட்டமை.

(126) புல் நுனியிலுள்ள பனித்துளிகள் சூரியனின் பொற்கதிர்கள் பட்டு வைரங்களாய் மின்னின. இந் நிகழ்வுக்குக்கு காரணமாக அமைந்த பொழுது,
(1) காலை வேளை
(2) நண்பகல்
(3) இரவு

(127) ''இன்று மழை பெய்யும் என மாமா கூறினார்'' இதற்கு பொருத்தமான காரணமாக அமைவது,
(1) மாமா ஒரு மந்திரவாதி ஆதலால்.
(2) வானில் கரு முகில்கள் காணப்பட்டமையால்.
(3) வானில் அதிகளவு நீர்க்காகங்கள் பறந்து சென்றமையால்.

(128) நாம் பயன்படுத்தும் மண்ணெண்ணெய்க்கு நிறம் சேர்ப்பதற்கான காரணமாக அமைவது,
(1) மண்ணெண்ணெயின் அழகிற்காக
(2) விளம்பரத்திற்காக
(3) மண்ணெண்ணெய்யை இனங்காண்பதற்காக

(129) கடலில் அதிகளவிலான மீன்கள் இறந்து கரை ஒதுங்கின. இதற்குக் காரணமாக அமைவது,
(1) கடலில் உப்பின் அளவு அதிகரித்தமையினால்.
(2) கடல் அதிகளவில் மாசடைந்தமை.
(3) மீனவர்கள் அதிகளவில் மீன்கள் பிடித்தமையினால்

S.Ageenthan(B.A)

(130) ''தயவு செய்து உள்ளே வரும் போது பாதணிகளை வெளியே கழற்றி வரவும்'' என்ற அறிவுறுத்தல்களுக்குப் பொருத்தமான காரணமாக அமைவது,
(1) பாதணி அணிந்து உள்ளே சென்றால் வழுக்கும் என்பதனால்.
(2) உள்ளே சுத்தம் பேணப்படுவதால்.
(3) உள்ளே பாதணிகளை வைப்பதற்கு இடமில்லை என்பதனால்

(131) தொலைக்காட்சி பார்ப்பது மாணவர்களுக்கு உகந்தது அல்ல என்ற கருத்துக்குப் பொருத்தமான காரணமாக அமைவது,
(1) தொலைக்காட்சி பார்ப்பதால் மாணவர்கள் பாடசாலைக்கு செல்வதில்லை என்பதால்.
(2) தொலைக்காட்சி பார்ப்பதால் கற்றலில் நாட்டம் குறைகின்றது என்பதால்.
(3) தொலைக்காட்சி பார்ப்பதால் மாணவர்களுக்கு ஓய்வு கிடைப்பதில்லை என்பதால்

(132) ''பருந்து சிறு பிராணிகளைப் பிடித்து உணவாக உண்கின்றது'' இதற்குக் காரணமாக அமைவது,
(1) பருந்துக்கு பழங்கள் மீது விருப்பம் இல்லை என்பதனால்.
(2) பருந்து ஒரு ஊனுண்ணிப் பிராணி என்பதனால்
(3) பருந்துக்கு சிறிய பிராணிகளைப் பிடித்து உண்பது இலகுவானது என்பதனால்

(133) இரை தேடச் சென்ற பறவைகள் கூடு நோக்கித் திரும்பிக் கொண்டிருந்தன. இந்நிகழ்வுக்குப் பொருத்தமான காரணமாக அமைவது,
(1) பறவைகளின் பசி தீர்ந்தமை
(2) பறவைகளுக்கு அன்று இரை கிடைக்காமை
(3) சூரியன் மேற்கு வானில் மறையத் தொடங்கியமை

(134) சுரங்கத் தொழிலாளி அனைவரும் தலைக்கவசம் அணிய வேண்டும் என்பதற்குரிய காரணமாக அமைவது,
(1) அதனை அணிவதனால் அழகாக இருப்பர்.
(2) தலைக்கவசம் அவர்களுக்கு பாதுகாப்பளிக்கும் என்பதனால்.
(3) தலைக்கவசத்தின் விலை மிகக் குறைவு என்பதனால்

www.ikeda.lk

(135) நீர் ஒரு அரிய வளம் என்பதற்கான காரணம்,
(1) நீர் அதிகளவில் கிடைப்பதனால்.
(2) நீர் குறைந்து வருவதனால் ஆகும்.
(3) நீர் பயிர்ச்செய்கைக்குப் பயன்படுத்துவதனாலாகும்.

(136) கேமா சில நாட்களாகப் பாடசாலைக்குத் தாமதமாகவே வந்தாள். இதற்குப் பொருத்தமான காரணமாக அமையக் கூடியது,
(1) தாமதமாக வருவதில் அவருக்கு விருப்பமிருந்தமை
(2) உடல் நிலை பாதிப்புக்குள்ளாகி இருந்தமை
(3) பாடசாலைக்கு வருவதற்கு விருப்பமின்மை

S.Ageenthan(B.A)

(137) பிராணிகள் மீது கருணை காட்ட வேண்டும் என்பது,
(1) பிராணிகள் எம்மீது கருணை காட்டுவதால்.
(2) பிராணிகள் எமக்கு நன்மை செய்வதால்.
(3) பிராணிகளும் நம்மைப் போன்று வாழவேண்டும் என்பதால்.

(138) களைப்பு நீங்கியது. தாகம் தீர்ந்தது. உற்சாகம் பிறந்தது. இந்நிகழ்வுக்கு காரணமாக அமைந்தது.
(1) ஓய்வு எடுத்தல்
(2) நீர் அருந்துதல்
(3) உறங்குதல்

(139) சாணக்கியன் பாடசாலையில் இடம்பெற்ற இல்ல விளையாட்டுப் போட்டியில் தான் பங்குபற்றிய மூன்று விளையாட்டுக்களிலும் முதல் இடத்தைப் பெற்றான். இதற்குக் காரணமாக அமைவது,
(1) அவனுக்கு போட்டி நடுவர்கள் நண்பர்கள் என்றமையால்
(2) சாணக்கியனுக்கு விளையாட்டுக்கள் இலகுவானதாக இருந்தமையால்
(3) சாணக்கியன் தினமும் பயிற்சியில் ஈடுபட்டமையால்

(140) எங்களது தோட்டத்தில் பூக்கள் அதிகளவில் மலர்ந்தன. ஆனால் மணம் வீசவில்லை. இதற்குக் காரணமாக அமைவது,
(1) பூக்களில் வண்டுகள் அதிகளவில் தேனைக் குடித்தமையினால்.
(2) அன்று மலர்ந்த பூக்கள் அனைத்தும் சிவப்பு நிறமாக இருந்தமையால்.
(3) அன்று மலர்ந்த பூக்கள் மணம் வீசாதவை என்பதால்.

(141) ''அதிக வேகம் மரணத்தை ஏற்படுத்தும்'' என்பது கருத்தாகும். இதற்குக் காரணமாக அமைவது,
(1) வேகமாகப் பயணஞ் செய்வதால் விபத்து ஏற்படலாம்.
(2) வேகமாக வாகனத்தைச் செலுத்தினால் சாரதி பயத்தினால் இறக்கலாம்.
(3) அவதானத்துடன் வேகமாகப் பயணம் செய்தால் மரணம் ஏற்படும்.

(142) நோயாளிகள் வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெறுவதற்கான காரணம்,
(1) வீட்டில் ஓய்வாக இருக்க முடியாது என்பதனால்.
(2) வீட்டில் மருந்து வில்லைகள் இல்லை என்பதனால்.
(3) நோயாளிகளை தினமும் வைத்தியர்கள் பார்வையிட வேண்டும் என்பதனால்.

(143) தரிந்து முயற்சியுடன் ஆர்வத்துடனும் படித்திருந்தால்,
(1) பரீட்சையில் சித்தி அடைவான்.
(2) பரீட்சையில் சித்தி அடைந்திருப்பான்.
(3) பரீட்சையில் சித்தி அடைந்திருக்கமாட்டான்.

S.Ageenthan(B.A)

www.ikedu.lk

(144) ஞாயிற்றுக்கிழமை, செவ்வாய்க்கிழமை, வியாழக்கிழமை, சனிக்கிழமை, ...

(1) செவ்வாய்க்கிழமை, வியாழக்கிழமை
(2) திங்கட்கிழமை, புதன்கிழமை
(3) ஞாயிற்றுக்கிழமை, திங்கட்கிழமை

S.Ageenthan(B.A)

(145) ஒரு வகுப்பிலுள்ள ஐந்து மாணவர்கள் தமக்கிடையே வாழ்த்து மடல்களைப் பரிமாறிக் கொண்டனர். அவர்கள் அனைவரும் பரிமாறிக் கொண்ட வாழ்த்து மடல்களின் மொத்த எண்ணிக்கை யாது?
(1) 18 (2) 20 (3) 15

(146) ஒரு வகுப்பிலுள்ள பத்து மாணவர்கள் தமக்கிடையே வாழ்த்து மடல்களைப் பரிமாறிக் கொண்டனர். அவர்கள் அனைவரும் பரிமாறிக் கொண்ட வாழ்த்து மடல்களின் மொத்த எண்ணிக்கை யாது?
(1) 100 (2) 90 (3) 81

(147) ஒரு வகுப்பிலுள்ள எட்டு மாணவர்கள் தமக்கிடையே வாழ்த்து மடல்களைப் பரிமாறிக் கொண்டனர். அவர்கள் அனைவரும் பரிமாறிக் கொண்ட வாழ்த்து மடல்களின் மொத்த எண்ணிக்கை யாது?
(1) 64 (2) 49 (3) 56

(148) நான்கு பேர் தமக்கிடையே வாழ்த்து மடல்களைப் பரிமாறிக் கொண்டனர் எனில், அவர்கள் அனைவரும் பரிமாறிக்கொண்ட வாழ்த்து மடல்களின் மொத்த எண்ணிக்கை யாது?
(1) 20 (2) 16 (3) 12

(149) ஏழு பேர் தமக்கிடையே வாழ்த்து மடல்களைப் பரிமாறிக் கொண்டனர் எனில், அவர்கள் அனைவரும் பரிமாறிக்கொண்ட வாழ்த்து மடல்களின் மொத்த எண்ணிக்கை யாது?
(1) 42 (2) 30 (3) 56

(150) ஆறு பேர் தமக்கிடையே வாழ்த்து மடல்களைப் பரிமாறிக் கொண்டனர் எனில், அவர்கள் அனைவரும் பரிமாறிக்கொண்ட வாழ்த்து மடல்களின் மொத்த எண்ணிக்கை யாது?
(1) 42 (2) 30 (3) 36

(151) ஒரு வகுப்பிலுள்ள ஒன்பது மாணவர்கள் தமக்கிடையே காலை வணக்கங்களைக் கூறிக் கொண்டனர். அவர்கள் அனைவரும் பரிமாறிக் கொண்ட காலை வணக்கங்களின் மொத்த எண்ணிக்கை யாது?
(1) 90 (2) 72 (3) 81

(152) கீழே தரப்பட்டுள்ள கூற்றுக்களில் தனிப்பட்ட கருத்தாக அமையும் கூற்றைத் தெரிந்து கீறிடுங்கள்.

(1) பரீட்சையில் சிவப்பு நிறப் பேனையினால் விடை எழுதக்கூடாது.
(2) அன்னாசிப் பழங்களை விட பப்பாசிப் பழங்கள் சுவையானவை.
(3) பொது வாகனங்களைப் பாதுகாப்பது சகல மக்களினதும் கடமையாகும்.

www.ikedu.lk

(153) நீலாவிடம் விஞ்ஞானப் புத்தகங்களும், கணிதப் புத்தங்களும் மாத்திரம் உள்ளன. நான் அவளிடமிருந்து இருண்டு புத்தகங்கள் வாங்கிக் கொண்டேன். அதன்படி நான் அவளிடமிருந்து பெற்றுக் கொண்ட இரு புத்தகங்களும்,

(1) ஒரு கணிதப் புத்தகமும், ஒரு விஞ்ஞானப் புத்தகமும்

(2) இரண்டு விஞ்ஞானப் புத்தகங்களும்

(3) கூற முடியாது

S.Ageenthan(B.A)

(154) வாகன உரிமையாளர்கள் அனைவரும் செல்வந்தர்கள் அல்லர் எனின்,

(1) செல்வந்தர் ஒருபோதும் வாகன உரிமையாளர்கள் அல்லர்.

(2) வாகன உரிமையாளர்களாக இல்லாத எல்லோரும் செல்வந்தர்கள் ஆவார்.

(3) சில வாகன உரிமையாளர்கள் செல்வந்தர் அல்லர்.

(155) மிகச் சரியாக எழுதப்பட்டுள்ள வாக்கியத்தைத் தெரிவு செய்க.

(1) கொதித்தாறிய நீரைப் பறுகுவோம்.

(2) கொதித்தாறிய நீரைப் பருகுவோம்.

(3) கொதித்தாறிய நீரப் பருகுவோம்

(156) ''கீதன் சிறுவயது முதலே எல்லோரிடமும் பணிவு, இரக்கம், உதவும் மனம் கொண்டவனாக விளங்கி வருகின்றான். எனவே எதிர்காலத்தில் நல்லவனாக இருப்பான்'' என ஆசிரியர் கூறினார். இக்கூற்றுக்குப் பொருத்தமான பழமொழி,

(1) மனமுண்டால் இடமுண்டு.

(2) விளையும் பயிரை முளையில் தெரியும்.

(3) புத்திமான பலவான்.

(157) கண்ணன் **14** விசுக்கோத்துப் பெட்டிகளைக் கடையில் வாங்கி வீட்டிற்குக் கொண்டுவர வேண்டிய இருந்தது. அவன் ஒரு தடவை **4** விசுக்கோத்துப் பெட்டிகளை மாத்திரம் கொண்டு வரலாம். இதற்கேற்ப எல்லா விசுக்கோத்துப் பெட்டிகளையும் கொண்டு வருவதற்கு அவன் குறைந்தபட்சம் எத்தனை தடவை செல்ல வேண்டும்?

(1) 3 **(2) 4** **(3) 5**

❖ **158,159** ஆம் வினாக்களிற்கு சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

(158) கடலில் மீன்கள் போல் வானத்தில்

(1) தூசுகள் (2) நட்சத்திரங்கள் (3) மேடுகள்

(159) விளையாடுவதற்கு மைதானம் போல் படிப்பதற்கு

(1) பாடசாலை (2) புத்தகம் (3) ஆசிரியர்

❖ பழமொழிக்குப் பொருத்தமான கருத்தைத் தெரிவுசெய்க.

(160) "வெள்ளம் வருமுன் அணைகட்ட வேண்டும்"

(1) நாம் எக்காரியத்திலும் முன்னேற்பாடாக நடந்துகொள்ள வேண்டும்.


(2) வெள்ளத்திற்கு பெரிய அணை கட்ட வேண்டும்.

(3) அணை அத்திபாரமிட்டுக் கட்ட வேண்டும்.

(161) ஒரு உதைபந்தாட்டம் **105** நிமிடம் வரை நீடித்தது. விளையாட்டு பி.ப **3.00** மணிக்கு ஆரம்பமானதாயின் எத்தனை மணிக்கு முடிந்திருக்கும்?

(1) பி.ப 4.45 (2) பி.ப 4.00 (3) பி.ப 5.15

(162) பின்வரும் உருக்களில் உள்ள எண் கோலத்திற்கேற்ப வெற்றிடத்தில் இருக்க வேண்டிய எண்ணைத் தெரிவு செய்க.




(1) 3 **(2) 4** **(3) 5**

(163) பின்வரும் உருவில் உள்ள எண் கோலத்திற்கு ஏற்ப வெற்றிடத்திற்குப் பொருத்தமான பகுதியை தெரிவு செய்க.

S.Ageenthan(B.A)


2	16	18	32
4			30
6		22	28
8	10	24	26



(1) (2) (3)

www.lkedu.lk

(164) இவ்வுருவில் $\frac{3}{5}$ பகுதியை நிழற்றுவதற்காக நிறந்தீட்டப்பட்டுள்ள கட்டங்களுக்கு மேலதிகமாக இன்னும் எத்தனை கட்டங்களை நிறந்தீட்ட வேண்டும்?



(1) 8 **(2) 10** **(3) 12**

(165) ஐந்து சம சதுரங்கள் ஒரு நிரையில் வைத்துத் தயார் செய்யப்பட்ட பின்வரும் உருவில் உள்ள செவ்வகத்தின் சுற்றளவு 180 சென்ரிமீற்றர் ஆகும். இங்கு ஒரு சதுரத்தின் பரப்பளவு எத்தனை சதுர சென்ரிமீற்றர்?



(1) 225 **(2) 256** **(3) 400**

❖ வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.

(166) ..... : சிரிப்பு எனில், துன்பம் : அழுகை
(1) ஆனந்தம் (2) மகிழ்ச்சி (3) இன்பம்

(167) மாரி : ..... ஆயின் கோடை : வெயில்
(1) வெள்ளம் (2) மழை (3) வசந்தம்

(168) பசுவிலிருந்து பால் போல் கோழியிலிருந்து .....
(1) இறைச்சி (2) முட்டை (3) குஞ்சு

(169) சிறைச்சாலையிலிருந்து குற்றவாளிகள் போல வைத்தியசாலையிலிருந்து .....
(1) நோயாளிகள் (2) தாதிமார்கள் (3) வைத்தியர்கள்

(170) மீனவனுக்குக் கடல் போன்று விளையாடுபவனுக்கு .....
(1) மைதானம் (2) பந்து (3) துடுப்பு

(171) ஆசிரியருக்கு மாணவன் போன்று மருத்துவருக்கு .....
(1) பொதுமக்கள் (2) நோயாளி (3) தாதி

❖ உவமானத்திற்குப் பொருத்தமான சந்தர்ப்பத்தைக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.

(172) ''எரிகிற நெருப்பில் எண்ணெய் ஊற்றினாற் போல்''
(1) சிக்கலைத் தீர்க்க உதவுதல்.
(2) மேலும் கோபமூட்டச் செய்தல்.
(3) வறியவர்களுக்குப் பண உதவி செய்தல்.

S.Ageenthan(B.A)

(173) ''ஆகாயத்தில் கோட்டை கட்டுவது போல''
(1) செய்ய முடியாத செயலைச் செய்ய முயலுதல்.
(2) மிக ஊக்கத்துடனும் தைரியத்துடனும் செயற்படுதல்.
(3) பெரிய வேலைகளைச் செய்ய தொடங்குதல்.

www.ikedu.lk

❖ பின்வரும் பாடலை வாசித்து சரியான விடையைத் தெரிவு செய்க.

இந்த உலகில் நீங்கள்
இயற்றும் தொண்டில் எல்லாம்
தந்தை தாயைப் பேணும்
தருமம் ஒன்றே பெரிது

(174) இக்கவிதையில் கவிஞர் கூறுவது எதனை?
(1) தருமம் செய்தலை
(2) தந்தை, தாயைப் பேணுதல்
(3) அயலவர்களுக்கு உதவி செய்தல்.

(175) தாய், தந்தையைக் குறிக்கும் தனிச்சொல்லைத் தெரிவு செய்க.
(1) உபாத்தியாயர் (2) பெற்றோர் (3)பெரியோர்

❖ கவிதையை நன்கு விளங்கி விடை தருக.

கந்தையானாலும் கசக்கியுடு - என்னும்
கற்பனைபோற்றி நடப்பாய் அம்மா!
சுந்தர மேனியுண்டாகும். அம்மா! இந்தச்
சுத்தத்தின் நன்மை சிறிதோ? அம்மா!

(176) இப்பாடல் வலியுறுத்தும் பழமொழி யாது?

(1) ஒற்றுமையே பலம்
(2) கந்தையானாலும் கசக்கியுடு.
(3) காகம் திட்டி மாடு சாகாது.

S.Ageenthan(B.A)

(177) ''சுந்தர மேனி'' என்பதன் கருத்து.

(1) அழகான உடல்
(2) அழகற்ற உடம்பு
(3) சுத்தத்தின் சிறப்பு

❖ பின்வரும் வாக்கியங்கள் கருத்துள்ளனவாக இருப்பதற்குச் செய்ய வேண்டிய மாற்றத்தைத் தெரிவு செய்க.

(178) வண்ணத்துப் பூச்சி மலரில் நீரைக் குடிக்கின்றது.

(1) வண்ணத்துப்பூச்சி என்பதற்கு பதிலாகக் ''குளவி'' என்பதை இடுதல்.
(2) ரோசா என்பதற்குப் பதிலாகத் ''தாமரை'' என்பதை இடுதல்.
(3) நீரை என்பதற்குப் பதிலாகத் ''தேனை'' இடுதல்.

(179) பிள்ளை வீதியில் பாடம் படிக்கின்றது.

(1) பிள்ளை என்பதற்குப் பதிலாக ''மகன்'' என்பதை இடுதல்.
(2) வீதியில் என்பதற்குப் பதிலாக ''அறையில்'' என்பதை இடுதல்.
(3) பாடம் படிக்கின்றது என்பதற்குப் பதிலாக '' ஆரம்பிக்கின்றது'' என்பதை இடுதல்.

www.ikedu.lk

❖ தரப்பட்டுள்ள கூற்றுக்குப் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.

(180) வெள்ளம் ஏற்படும் போது வியாபாரிகள் பொருட்களின் விலைகளை உயர்த்துகின்றனர். இச்செயலானது,

(1) காற்றுள்ள போதே தூற்றிக்கொள் என்பதாகும்.

(2) எரிகின்ற வீட்டில் பிடிங்கினது இலாபம் என்பதாகும்.

(3) பட்ட காலிலே படும் கெட்ட குடியே கெடும் என்பதாகும்.

(181) எமது நாட்டின் பல பிரதேசங்களில் ஆறுகளும், அருவிகளும் வற்றிக் கொண்டு போகின்றன. இதற்குக் காரணம்,

(1) மக்கள் விவசாயத்திற்காக அதிகளவு நீரைப் பயன்படுத்துகின்றனர்.

(2) மக்கள் அதிகளவு குடிநீரைப் பயன்படுத்துகின்றனர்.

(3) மக்கள் தொடர்ந்து காடுகளை அழித்து வருகின்றமை.

(182) ''மனநிறைவே ஒருவனுக்குச் சிறந்த செல்வமாகும்'' என்ற பழமொழியின் கருத்து,

(1) பொறுத்தார் பூமியாள்வார்.

(2) போதுமென்ற மனமே பொன்செய்யும் மருந்து.

(3) பேராசை பெருந் தரித்திரம்.

❖ பின்வரும் வினாக்களில் தொடக்கத்தில் தரப்பட்டுள்ள கூற்றைப் பற்றிய சரியான முடிவைத் தெரிவு செய்க.

(183) பாடசாலைச் சேவைப் பேருந்து நேரந்தவறாமல் பாடசாலைக்கு வருகின்றது.

(1) இது பெரும்பாலும் நடைபெறும் ஒரு நிகழ்ச்சியாகும்.

(2) இது ஒரு போதும் நடைபெறுவதில்லை.

(3) இது எப்போதும் நடைபெறும் ஒரு நிகழ்ச்சியாகும்.

(184) முயன்றால் வெற்றியீட்டலாம்.

(1) இது எப்போதும் உண்மையாகும்.

(2) இது பெரும்பாலும் உண்மையாகும்.

(3) இது ஒரு போதும் உண்மையானதன்று.

S.Ageenthan(B.A)

(185) ''போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து''

(1) மனம் விரும்புவதை எல்லாம் செய்ய வேண்டும்
(2) மனநிறைவு எப்போதும் உயர்வானதாகும்.
(3) மனம் ஒரு குரங்கு.

❖ தரப்படும் வாக்கியங்களில் தடித்த எழுத்தில் உள்ள சொல்லுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

(186) பரீட்சைப் பெறுபேறுகளை அறிய அதிஸ்ரா சிட்டாகப் பறந்து சென்றான்.

(1) மெதுவாக (2) வேகமாக (3) பாய்ந்து

(187) மழை பெய்தவுடன் கேஷ்ணவித் ஓட்டமும் நடையுமாக வீட்டுக்குச் சென்றாள்.

(1) மெதுவாக (2) நடையாக (3) ஓடியும் நடந்தும்

www.ikedu.lk

(188) ஒரு குழுவில் ஆறு மாணவர்கள் தமக்கிடையே கைகுலுக்கிக் கொண்டனர். அவர்கள் அனைவரும் பரிமாறிக்கொண்ட கைகுலுக்கல்களின் மொத்த எண்ணிக்கை யாது?

(1) 15 (2) 30 (3) 10

(189) ஒரு குழுவில் பத்து மாணவர்கள் தமக்கிடையே கைகுலுக்கிக் கொண்டனர். அவர்கள் அனைவரும் பரிமாறிக்கொண்ட கைகுலுக்கல்களின் மொத்த எண்ணிக்கை யாது?

(1) 90 (2) 45 (3) 20

(190) ஒரு குழுவில் எட்டு மாணவர்கள் தமக்கிடையே கைகுலுக்கிக் கொண்டனர். அவர்கள் அனைவரும் பரிமாறிக்கொண்ட கைகுலுக்கல்களின் மொத்த எண்ணிக்கை யாது?

(1) 16 (2) 28 (3) 56

(191) ஒரு குழுவில் ஐந்து மாணவர்கள் தமக்கிடையே கைகுலுக்கிக் கொண்டனர். அவர்கள் அனைவரும் பரிமாறிக்கொண்ட கைகுலுக்கல்களின் மொத்த எண்ணிக்கை யாது?

(1) 10 (2) 25 (3) 20


(192) நான்கு இலக்கங்களைக் கொண்ட ஓர் எண் உள்ளது. அந்த எண்ணின்

- ❖ முதலாம் இலக்கம் நான்காம் இலக்கத்தின் ஐந்து மடங்காகும்.
- ❖ இரண்டாம் இலக்கம் மூன்றாம் இலக்கத்தின் நான்கு மடங்காகும்.

அவ்வெண் கீழே தரப்பட்டுள்ள எண்களில் யாதாக இருக்கலாம்?

(1) 5182 (2) 5281 (3) 5821

(193) இவ்வுருவில் ஆறு பக்கங்களும் A,B,C,D,E,F எனக் குறிக்கப்பட்டுள்ள ஒரு தாயக்கட்டையின் மூன்று நிலைகள் உள்ளன.



S.Ageenthan(B.A)

மேற்குறித்த தாயக்கட்டையில் D எனக் குறிக்கப்பட்டுள்ள பக்கத்திற்கு எதிரேயுள்ள பக்கத்தைக் காட்டும் எழுத்து யாது?


(1) A (2) B (3) F

(194) இப்படத்தில் அதிகமாகவுள்ளவை,

(1) பூக்கள்


(2) அலரிப்பூக்கள்

(3) மல்லிகைப் பூக்கள்




www.ikedu.lk

(195) A,B,C,D என்னும் நான்கு குழுக்களில் உள்ள பிள்ளைகளின் எண்ணிக்கைகள் இவ்வுருவில் வகைக்குறிக்கப்பட்டுள்ளன. குழு A யில் உள்ள பிள்ளைகளின் எண்ணிக்கை 48 ஆகும். இதற்கு ஏற்ப B,C ஆகிய இரு குழுக்களிலும் உள்ள பிள்ளைகளின் மொத்த எண்ணிக்கை யாது?



(1) 24 **(2) 36** **(3) 42**

❖ கட்டத்தினுள் தரப்பட்டுள்ள உருக்களது பெறுமானங்களை அவதானித்து வினாக்களுக்கு விடை தருக.



S.Ageenthan(B.A)

(196) இவ்வுருக்களில் பெறுமானம் 15 இற்கு உரிய உரு எது?

(1)  (2)  (3) 

(197) 

இடைவெளிக்குப் பொருத்தமான பெறுமானம் யாது?

(1) 25 (2) 45 (3) 35

(198) ஒருவர் தன்னிடமுள்ள பணத்தில் ¼ பங்கை புத்தகம் வாங்கச் செலவழித்தார். எஞ்சிய பணத்தில் ½ பங்கை தனது தம்பிக்குக் கொடுத்தார். எஞ்சியுள்ள பணம் ரூபாய் 150.00 எனின், அவரிடம் ஆரம்பத்தில் இருந்த பணத்தொகை எவ்வளவு?

(1) ரூபாய் 300.00 (2) ரூபாய் 450.00 (3) ரூபாய் 400.00

www.lkedu.lk

❖ பின்வரும் தகவல்களைக் கொண்டு கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக.

சிவப்பு முட்டை	**1**
வெள்ளை முட்டை	**1**
விலை ரூபா **12.00**	

சிவப்பு முட்டை	**3**
வெள்ளை முட்டை	**2**
விலை ரூபா **30.50**	

S.Ageenthan(B.A)


(199) சிவப்பு முட்டை ஒன்றின் விலை யாது?


(1) ரூபாய் **5.50** (2) ரூபாய் **6.00** (3) ரூபாய் **6.50**

(200) வெள்ளை முட்டை ஒன்றின் விலை யாது?

(1) ரூபாய் **5.50** (2) ரூபாய் **6.00** (3) ரூபாய் **6.50**

❖ பின்வரும் உருக்களைப் பயன்படுத்தி உரிய விடையைத் தெரிவு செய்க.






(201) புத்தகம் ஒன்றினதும் பேனா ஒன்றினதும் விலை யாது?


(1) ரூபாய் **37** (2) ரூபாய் **47** (3) ரூபாய் **57**


(202) புத்தகம் **5** இனதும் பேனா **2** இனதும் விலை யாது?

(1) ரூபாய் **176** (2) ரூபாய் **186** (3) ரூபாய் **196**

(203) சில பழங்களின் உருக்கள் தரப்பட்டுள்ளன. அவற்றில் மாம்பழம் ஒன்றினதும், அப்பிள்பழம் ஒன்றினதும் விலை ரூபாய் 50.00 எனின், வினாவுக்குப் பொருத்தமான விடையினைத் தெரிவு செய்க.








அப்பிள்பழம், மாம்பழம், பப்பாசிப்பழம், அன்னாசிப்பழம் ஆகியவற்றின் விலை யாது?

(1) ரூபா **250.00** (2) ரூபா **300.00** (3) ரூபாய **190.00**

www.ikeon.lk

❖ தரப்பட்டுள்ள உருத்தொகுதியின் ஒழுங்கை அவதானித்து வினாக்களுக்கு விடை தருக.



S.Ageenthan(B.A)

(204) மாதுளம்பழம் ஒன்றின் விலை ரூ.**300** எனின், மாம்பழம் ஒன்றின் விலை யாது?
(1) ரூபா **75** (2) ரூபா **40** (3) ரூபா **25**

(205) ஒரு பப்பாசிப் பழத்தினதும் அன்னாசிப்பழத்தினதும் விலை யாது?
(1) ரூபா **220** (2) ரூபா **225** (3) ரூபா **275**

(206) வாகனத்தரிப்பிடம் ஒன்றில் மோட்டார் சைக்கிள்களும் ஆட்டோக்களுமாக மொத்தம் 34 நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. அவற்றின் சக்கரங்களின் எண்ணிக்கை 82 எனின், அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள்களின் எண்ணிக்கை யாது?

(1) 14 (2) 20 (3) 34

(207) வாகனத்தரிப்பிடம் ஒன்றில் மோட்டார் சைக்கிள்களும் ஆட்டோக்களுமாக மொத்தம் 61 நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. அவற்றின் சக்கரங்களின் எண்ணிக்கை 151 எனின், அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள்களின் எண்ணிக்கை யாது?
(1) 32 (2) 29 (3) 20

(208) வாகனத்தரிப்பிடம் ஒன்றில் மோட்டார் சைக்கிள்களும் ஆட்டோக்களுமாக மொத்தம் 46 நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. அவற்றின் சக்கரங்களின் எண்ணிக்கை 157 எனின், அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஆட்டோக்களின் எண்ணிக்கை யாது?
(1) 21 (2) 25 (3) 23

(209) வாகனத்தரிப்பிடம் ஒன்றில் மோட்டார் சைக்கிள்களும் ஆட்டோக்களுமாக மொத்தம் 55 நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. அவற்றின் சக்கரங்களின் எண்ணிக்கை 136 எனின், அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள்களின் எண்ணிக்கை யாது?
(1) 29 (2) 58 (3) 78

(210) வாகனத் தரிப்பிடம் ஒன்றில் ஆட்டோக்களும் கார்களுமாக மொத்தம் 39 நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. அவற்றின் சக்கரங்களின் எண்ணிக்கை 138 எனின், அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கார்களின் எண்ணிக்கை யாது?
(1) 18 (2) 21 (3) 19

S.Ageenthan(B.A)

(211) வாகனத் தரிப்பிடம் ஒன்றில் ஆட்டோக்களும் கார்களுமாக மொத்தம் 45 நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. அவற்றின் சக்கரங்களின் எண்ணிக்கை 154 எனின், அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கார்களின் எண்ணிக்கை யாது?
(1) 26 (2) 19 (3) 21


www.ikeou.lk


(212) வாகனத் தரிப்பிடம் ஒன்றில் ஆட்டோக்களும் கார்களுமாக மொத்தம் 32 நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. அவற்றின் சக்கரங்களின் எண்ணிக்கை 114 எனின், அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கார்களின் எண்ணிக்கை யாது?
(1) 14 (2) 18 (3) 16


(213) வாகனத் தரிப்பிடம் ஒன்றில் ஆட்டோக்களும் கார்களுமாக மொத்தம் 42 நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. அவற்றின் சக்கரங்களின் எண்ணிக்கை 143 எனின், அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கார்களின் சக்கரங்களின் எண்ணிக்கை யாது?
(1) 17 (2) 75 (3) 68

(214) வாகனத் தரிப்பிடம் ஒன்றில் ஆட்டோக்களும் கார்களுமாக மொத்தம் 50 நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. அவற்றின் சக்கரங்களின் எண்ணிக்கை 177 எனின், அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஆட்டோக்களின் சக்கரங்களின் எண்ணிக்கை யாது?
(1) 69 (2) 23 (3) 27

❖ ஒரு சதுரமுகியின் ஆறு பக்கங்களிலும் **1, 2, 3, 4, 5, 6** என்னும் இலக்கங்கள் எழுதப்பட்டுள்ள விதம் உருக்களில் காணப்படுகின்றது.







(215) இலக்கம் **1** இற்கு எதிரே உள்ள இலக்கம் யாது?
(1) 6 **(2) 5** **(3) 4**

(216) இலக்கம் **3** இற்கு எதிரே உள்ள இலக்கம் யாது?
(1) 6 **(2) 4** **(3) 2**


(217) இலக்கம் **2** இற்கு எதிரே உள்ள இலக்கம் யாது?
(1) 4 **(2) 6** **(3) 5**


(218) இலக்கம் **4** இற்கு எதிரே உள்ள இலக்கம் யாது?
(1) 3 **(2) 5** **(3) 6**


(219) இலக்கம் **6** இற்கு எதிரே உள்ள இலக்கம் யாது?
(1) 3 **(2) 2** **(3) 4**

www.ikeda.lk

❖ இத்தாயக்கட்டையை அவதானித்து விடை தருக.








(220) இச்சதுரமுகியில் எழுத்து C யிற்கு எதிரே இருக்கும் பக்கத்தில் உள்ள எழுத்து யாது?
(1) D (2) B (3) E


(221) இச்சதுரமுகியில் எழுத்து A யிற்கு எதிரே இருக்கும் பக்கத்தில் உள்ள எழுத்து யாது?
(1) E (2) F (3) D


(222) இச்சதுரமுகியில் எழுத்து B யிற்கு எதிரே இருக்கும் பக்கத்தில் உள்ள எழுத்து யாது?
(1) C (2) A (3) D

(223) இச்சதுரமுகியில் எழுத்து E யிற்கு எதிரே இருக்கும் பக்கத்தில் உள்ள எழுத்து யாது?
(1) A (2) C (3) D

❖ தரப்பட்டுள்ள மூன்று நிலைகளைக் கொண்ட தாயக்கட்டைகளையும் பயன்படுத்தி







(224) இலக்கம் 6 இற்கு எதிரே உள்ள பக்கத்திலுள்ள இலக்கம் எது?
(1) 1 (2) 3 (3) 4

(225) இலக்கம் **4** இற்கு எதிரே உள்ள பக்கத்திலுள்ள உள்ள இலக்கம் எது?
(1) 3 **(2) 6** **(3) 5**


(226) இலக்கம் **2** இற்கு எதிரே உள்ள பக்கத்திலுள்ள உள்ள இலக்கம் எது?
(1) 1 **(2) 4** **(3) 5**


(227) இலக்கம் **3** இற்கு எதிரே உள்ள பக்கத்திலுள்ள உள்ள இலக்கம் எது?
(1) 5 (2) 6 (3) 1


(228) இலக்கம் **6** இற்கு எதிரே உள்ள பக்கத்திலுள்ள உள்ள இலக்கம் எது?
(1) 3 (2) 4 (3) 2

www.lkedu.lk

❖ இச்சசதுரமுகியில் A தொடக்கம் F வரையான எழுத்துக்கள் காட்டப்பட்டுள்ளன.







(229) இச்சதுரமுகியில் எழுத்து F இற்கு எதிரே இருக்கும் பக்கத்தில் உள்ள எழுத்து எது?

(1) E (2) D (3) A

(230) இச்சதுரமுகியில் எழுத்து A இற்கு எதிரே இருக்கும் பக்கத்தில் உள்ள எழுத்து எது?

(1) B (2) F (3) C

(231) இச்சதுரமுகியில் எழுத்து C இற்கு எதிரே இருக்கும் பக்கத்தில் உள்ள எழுத்து எது?

(1) D (2) A (3) E

(232) இச்சதுரமுகியில் எழுத்து B இற்கு எதிரே இருக்கும் பக்கத்தில் உள்ள எழுத்து எது?

(1) F (2) A (3) C

www.lkedu.lk